# இயல் 1

# ஆய்வின் அமைப்பும் நோக்கமும்

# இயல் - 1

## ஆய்வின் அமைப்பும் நோக்கமும்

அன்பெனும் உயர்பண்பின் அடியொற்றி அமைவது தான் மக்கள் வாழ்வியல். பன்னெடுங்கால வரலாறு, உலகெங்கும் வாழும் பல்வேறு இனத்தவர் வாழ்க்கையை நன்கு எடுத்துக்காட்டும் மக்களினம், வாழையடி வாழையாகப் பெருகிநின்று, இன்று கற்பனைக்கும் எட்டாத உயர்நிலையில் விளங்குகிறது. மக்கள் பெறும் அறிவு, ஞானம் தொடர் சங்கிலி போல நெடிது பெருகிக் காலச் சூழலுக்கு ஏற்ப வளர்ச்சி காண்பதில் வியப்பில்லை. அலை கடல் ஓடியும் அறிவைப் பெருக்கும் உலகச் சூழல் நாள்தோறும் பலரும் காணக்கூடிய ஒன்று. இதன்வழி மக்கள் வாழ்க்கையினை மொழி வாயிலாக எடுத்துக் காட்டுவது தான் இலக்கியம். இவ்விலக்கியங்களில் சிறுகதையும் ஒருவகை. இவையே மனித வாழ்க்கையின் இன்பங்களையும், அவலங்களையும் படம்பிடித்துக் காட்டுகின்றன. இன்பங்களை விடஅவலங்கள் மனித மனங்களில் ஆழப்பதிபவை. ஆழப்பதிபவையே சிந்தனையைத் தூண்டக்கூடியவை.

இலக்கியங்கள் தாங்கள் எழுந்த காலத்திலுள்ள மக்களின் சமுதாய நிலையையும், அவர்களது பழக்கவழக்கங்களையும், பெண்களது நிலையையும் தன்னுடைய புலன்களாகக் கொண்டு கற்போர் அறிந்து கொள்வதற்கு உதவும் கருவூலங்களாக அமைந்துள்ளன.

பிரபஞ்சனின் சிறுகதைகளில் ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட சிறுகதைகள் குறித்து இதுவரை யாரும் விரிவாக ஆய்வு செய்ததில்லை. இவரது சிறுகதைகளின் வழி பெண்களின் நிலையையும், சமுதாயத்தின் நிலையையும், மக்களது பழக்கவழக்கங்களையும், அறிந்து கொள்ள வேண்டுமென்றும், அதை வெளிக்காட்ட வேண்டுமென்ற உந்துதல் ஆய்வாளருக்கு ஏற்பட்ட காரணத்தினால் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது.

**ஆய்வுத் தலைப்பு :-**

“பிரபஞ்சன் சிறுகதைகளில் வாழ்வியல் கூறுகள்” என்பது இவ்வாய்வேட்டின் தலைப்பாகும். பிரபஞ்சன் சிறுகதைகளில் வாழ்வியல் சிந்தனைகளை ஆராய்வதோடு,

கதாபாத்திரங்கள் மூலம் வாழ்வியல் நெறிமுறைகளை வெளிக்காட்ட வேண்டுமென்ற ஆய்வாளரது விருப்பமே இத்தலைப்பினைத் தேர்வு செய்யக் காரணமாக அமைந்தது.

ஆய்வு நோக்கம் :-

இலக்கியத்தின் மூலம் ஒரு சமுதாயத்தைக் காணமுடியும் என்பது குறிப்பிடத்தக்கது. ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட சிறுகதைகளில் இத்தகைய ஆய்வு இதுவரை யாரும் நிகழ்த்தவில்லையாதலால், சிறுகதைகளின் மூலம் சமுதாயத்தில் பெண்களின் நிலை, இன்றையச் சமுதாயத்தில் மக்களது வாழ்வியல் நெறிமுறைகள், சமுதாயத்தில் மக்களது நிலை, அவர்கள் மேற்கொண்ட பழக்கவழக்கங்கள், கதாப்பாத்திரத்தின் சிறப்பு ஆகியவற்றை வெளிக்கொணர்வதே ஆய்வாளரின் நோக்கமாகும்.

முதன்மை ஆதாரங்கள் :-

பிரபஞ்சனின் சிறுகதைத் தொகுப்பான 'மனிதர்கள் மத்தியில்', 'பூக்களை மிதிப்பவர்கள்', 'விட்டுவிடுதலையாகி', 'நேற்று மனிதர்கள்', 'பொன்முடிப்பு', 'இருட்டின் வாசல்', 'வசந்தம் வரும்' ஆகிய ஏழு சிறுகதைத் தொகுப்புகள் முதன்மை ஆதாரங்களாகக் கொள்ளப்பட்டன.

துணைமை ஆதாரங்கள் :-

சங்க இலக்கிய நூல்களும், நாவல் தொடர்பான பிற இலக்கியங்களும், ஆராய்ச்சிக் கட்டுரைகளும், பிற இலக்கிய இலக்கண நூல்களும், ஆய்வுக் கோவை, கலைக்களஞ்சியங்கள் போன்ற நூல்களும் துணைமை ஆதாரங்களாகக் கொள்ளப்பட்டன.

ஆய்வு எல்லை :-

பிரபஞ்சன் சிறுகதைகளில் வெளிப்படுகின்ற கதாபாத்திரங்களின் குணநலன்கள், பெண்ணியச் சிந்தனை, சமுதாயநிலை, பழக்கவழக்கங்கள் ஆகியன ஆய்வு எல்லையாக வரையறுக்கப்பட்டுள்ளன.

கருதுகோள் :-

இன்றையச் சமுதாய மக்களின் வாழ்க்கைப் பிரச்சனைகளை வெளிப்படுத்தும் ஊடகங்களாகச் சிறுகதைகள் திகழ்கின்றன. சமுதாயத்தில் மக்களுடைய பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள் வாயிலாக மக்களுடைய வாழ்வியல் கூறுகளை வெளிக்கொணரவும், குறிப்பாகப் பெண்கள் பலவித இன்னல்களுக்கு ஆளாகின்றனர் என்பதை வெளிப்படுத்துவதற்காகவும், கதாப்பாத்திரங்கள் மூலம் சமுதாய நிகழ்வுகளை உலகறியச் செய்ய வேண்டும் என்பதற்காகவும், பிரபஞ்சனின் சிறுகதைகள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு இவ்வாய்வின் வழி மக்கள் நீக்கப்பட வேண்டிய செயல்களை நீக்கியும், ஏற்புடையத் தக்கதை ஏற்றும் வாழ வேண்டும் என்பதே ஆய்வாளரின் கருதுகோளாகும்.

ஆய்வின் அணுகுமுறை :-

"பிரபஞ்சன் சிறுகதைகளில் வாழ்வியல் கூறுகள்" என்ற இந்த ஆய்வில் சிறுகதைகளில் உள்ளடக்கப் போக்குகளை விளக்குவதற்கு விளக்கவியல் அணுகுமுறை பின்பற்றப்பட்டுள்ளது.

சிறுகதைகளில் கதாப்பாத்திரங்களின் பண்பு நலன்களை வெளிக்கொணர திறனாய்வு அணுகுமுறை பின்பற்றப்பட்டுள்ளது.

சமுதாய உணர்வுகளைப் புலப்படுத்த ஆங்காங்கே தேவையான இடங்களில் சமுதாயவியல் அணுகுமுறை பின்பற்றப்பட்டுள்ளது.

செய்திகள் பகுத்துக் கூறப்பட்டுள்ளமையில் பகுப்பாய்வு முறை பின்பற்றப்பட்டுள்ளது.

ஆய்வுப் பகுப்பு :-

1. ஆய்வின் அமைப்பும் நோக்கமும்
2. பாத்திரப் படைப்பு
3. சிறுகதைகள் காட்டும் சமுதாயம்
4. பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும்
5. சிறுகதை காட்டும் பெண்ணியம்
6. முடிவுரை

**இயல் - 1 ஆய்வின் அமைப்பும் நோக்கமும் :-**

முதல் இயலான ஆய்வின் அமைப்பும் நோக்கமும் என்ற தலைப்பில் ஆய்வுத் தலைப்பு, ஆய்வு நோக்கம், முதன்மை ஆதாரங்கள், துணைமை ஆதாரங்கள், ஆய்வு எல்லை, கருதுகோள், ஆய்வேட்டின் அணுகுமுறை, ஆய்வுப் பகுப்பு ஆகியன இடம்பெற்றுள்ளன.

**இயல் - 2 பாத்திரப் படைப்பு :-**

பாத்திரப்படைப்பு என்ற தலைப்பில் அமைந்த இரண்டாவது இயலில் பாத்திர விளக்கம், பாத்திரங்களைத் தேர்ந்தெடுக்குமிடம், சிறப்பு, முதன்மைப் பாத்திரங்கள்(ஆண், பெண்), பெண்ணின் மனம், இலக்கியப் பாத்திரங்களோடு ஒப்பிடுதல், வர்ணனை, முற்போக்குச் சிந்தனை, பிற்போக்குச் சிந்தனை உள்ள பாத்திரங்கள் ஆகியன இடம்பெற்றுள்ளன.

**இயல் - 3 சிறுகதைகள் காட்டும் சமுதாயம் :-**

இவ்வியலில் சமுதாயம் பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளன. சமுதாயம் பற்றிய விளக்கமும், சொல்லாராய்ச்சி, தோற்றம், சிறுகதையும், சமுதாயமும், சாதி, சாதியில் ஏற்றத்தாழ்வு, காதல்-விளக்கம், காதலுணர்ச்சி, வறுமைநிலை, அரசியல், அரசியல்வாதிகளின் நிலை, சினிமா, தாசி, பொருளாதாரம் ஆகியன இடம் பெற்றுள்ளன.

**இயல் - 4 பழக்கவழக்கங்களும், நம்பிக்கைகளும் :-**

பழக்கவழக்கங்களும், நம்பிக்கைகளும் என்ற தலைப்பில் அமைந்த நான்காவது இயலில் நம்பிக்கை - சொல் விளக்கம், தோற்றம், இறைநம்பிக்கை, பிள்ளையார் பால்குடித்தல், கண்ணேறு பற்றிய நம்பிக்கை, பேய் பற்றிய நம்பிக்கை, நேர்த்திக்கடன், விதி பற்றிய நம்பிக்கை, ஆவி பற்றிய நம்பிக்கை, பழக்கவழக்கங்கள் சொல்வரையறை, பழக்கவழக்கம் சொல்விளக்கம், பொருள் வரையறை, கருவைக் கலைத்தல், பெண்களும் மருவருந்துதல், சாபம் விடும் வழக்கம், சாபமிடல், சாபத்திற்கான காரணங்கள், பழி சுமத்துதல், மாரியம்மனை வழிபடுதல், பூ சுற்றுதல் ஆகியன இடம் பெற்றுள்ளன.

**இயல் - 5 சிறுகதை காட்டும் பெண்ணியம் :-**

இவ்வியலில் சங்ககாலம், சங்கமருவிய காலம், காப்பியக் காலம் ஆகிய காலங்களில் பெண்களின் நிலை குறித்தும், சமயவழி பெண்கள் குறித்தும், குடும்பம், கற்பு, பெண் சுதந்திரம், தாய், பெண்மையின் இழிவு, காதல், பாலியல் சிக்கல், திருமணம், உழைக்கும் மகளிர் பிரச்சனைகள், உறவுநிலை ஆகியன குறித்தும் இடம் பெற்றுள்ளன.

**இயல் - 6 முடிவுரை :-**

முடிவுரையில் ஐந்து இயல்களிலும் ஆராய்ந்து கண்டறியப்பட்ட செய்திகளும், ஆய்வின் பயன்களாக ஆய்வாளர் கருதுவனவும், வரும் ஆய்வாளர்களுக்கு இடம் கொடுக்கும் ஆய்வுக் களங்களும் இடம் பெற்றுள்ளன.

இறுதியாகத் துணைநூற்பட்டியலும், நூல் அகரவரிசையும், ஆங்கில நூற்பட்டியலும் இடம் பெற்றுள்ளன.